Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை–11 | 23–04–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –065



உங்கள் அனைத்து தேவைகளுக்கும்

R.V. பந்தல் சேவை

மூல்லைசாலை தருமபுரம்.

விநாயகர் வீதி, மயிலிட்டி.

-சபாநாயகர் பதவிக்கு வரலாறு காணாத கடும் போட்டி-

# எதிர்க் கட்சி வேட்பாளர் லொக்கு பண்டார

# ஒரு மேலதிக வாக்கால் தேர்ந்தெடுப்பு!

## மூன்று தடவைகள் நடந்த வாக்களிப்பு

(கொழும்பு)

**சிறிலங்காவின்13ஆவது பாராளுமன்றத்திற்கான புதிய சபாநாயகராகக்கடும் போட்டியின் மத்தியில் ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் டபிள்யூ ஜே.எம். லொக்கு பண்டார தெரிவு செய்யப்பட்டார்.வரலாறு காணாத வகையில் மூன்றாவதுதடவையாக நடைபெற்ற வாக்கெடுப்பில் ஒரு மேலதிக வாக்கைப்பெற்று அவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.**

13ஆவது பாராளுமன்றத்தின் முதலமர்வு நேற்று முற்பகல் 10.00மணிக்கு ஆரம்பமானது. இதில் சனாதிபதி சந்திரிகாவின் செய்தி வாசிக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றச் செயலர் பிரியாணி விஜயசேகர சபாநாயகர் தெரிவு தொடர்பான அறிவித்தலை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து ஐ.தே. முன்னணி சார்பில் டபிள்யூ.ஏ.எம். லொக்கு பண்டாராவின் பெயரை



முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா முன்மொழிய முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம்

(IVஆம் பக்கம் பார்க்க)

## 1960இன் பின் 2004; சிறி.பாராளுமன்றில் ஏப்.22

(கொழும்பு)

1960ஆம் ஆண்டு டட்ளி சேனா நாயக்கவின் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம், ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி கொள்கை பிரகடன வாக்களிப்பின் பொழுது,அதற்கு எதிராக தமிழரசுக்கட்சிவாக்களித்தபடியால், அரசாங்கம் பதவி விலக நேர்ந்தது.

அன்றைய அரசாங்கம் சிறுபான்மையாக இருந்தபடியால் இந்தக்கதி நேர்ந்தது. இதேபோல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு 2004.04.22ஆம் திகதி ஏப்ரல் மாதம் இலங்கையின் 13ஆவது பாராளுமன்ற சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்களிப்பொன்றை நடத்தியுள்ளமை இரண்டு கட்சிகளுக்கும் இடையில் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது.

ஏனெனில் அன்று ஐ.தே.கட்சிக்கு நேர்ந்தகதி இன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு

(IVஆம் பக்கம் பார்க்க)

## கடந்த பெப்.7முதல் ஏப்.4 வரை அரசு வழங்கிய நியமனங்கள் ரத்து

*–சனாதிபதி அறிவிப்பு*

(கொழும்பு)

கடந்த பெப்ரவரி 7ஆம் திகதி தொடக்கம் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட ஏப்ரல் 4ஆம் திகதிவரையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசால் வழங்கப்பட்ட சகல நியமனங்கள் பதவி உயர்வுகள் யாவும்ரத்துச் செய்யப்பட்டுள்ளதென சனாதிபதி அறி வித்துள்ளார்.

ரத்துச்செய்யப்பட்ட வெற்றிடங்களுக்கு வெகுவிரைவில் புதிய நியமனங்கள் வழங்குவதற்குநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஐ.ம.சு.மு. அரசை ஆட்சியிலிருந்து விலக்க வரும் நாட்களில் முயற்சிகள் மேற்கொள்வோம்

பா. உ. மகேஸ்வரன்

(கொழும்பு)

எமக்கு ஆதரவான கட்சிகளைத் திரட்டி சிறுபான்மை அரசை ஆட்சியில் இருந்து நீக்க முயற்சி செய்வோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம்பியுமான மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 85 பாராளுமன்ற உறுப்பினர்களும் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா, மலையக மக்கள் விடுதலை முன்னணி ஆகியன இணைந்து தான்

(IVஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் வேட்பாளரை ஆதரித்தது த.கூட்டமைப்பு சனாதிபதிக்கு விடுத்த எச்சரிக்கையே

*பா.உ.செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு*

சமாதான நடவடிக்கைகள் குறித்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா எதுவித முன்முயற்சிகளையும் எடுக்காத நிலையில் அதற்கு எச்சரிக்கை விடுக்கும் நோக்கிலேயே சபாநாயகர் தெரிவில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவாகத் தாம் வாக்களித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த செல்வம் அடைக் கலநாதன் சமாதானப் பேச்சுக்களை தனது ஆட்சி அமைக்கப்பட்டவுடன் உடனடியாக ஆரம்பிக்கப்போவதாக சனாதிபதி சந்திரிகா தெரிவித்திருந்தார். வாக்குறுதிவழங்கி இவ்வளவு காலமும் சமாதானம் குறித்த எதுவித நடவடிக்கையும் சந்திரிகாவால் எடுக்கப்படவில்லை. இதற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் மாத்திரமே ஐ.தே.கட்சியின் உறுப்

(IVஆம் பக்கம் பார்க்க)

## சம்பந்தனை பேசவிடாது இனவாதிகள் கூச்சல்

(கொழும்பு)

நேற்றைய தினம் சிறிலங்கா பாராளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவு நிகழ்வின்பின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக இரா. சமபந்தன் உரையாற்றிய வேளை தோல்வியுற்ற சிங்களக் கட்சிகள் அவரைத் தொடர்ந்து உரையாற்ற விடாது தடுக்கும் வகையில் மிக மோசமாகக் கூச்சல் இட்டு குளப்பியுள்ளனர்.

## அரசதரப்பில் அமரமுயன்ற ஹெல உறுமய பிக்குகள்

(கொழும்பு)

ஒருவாரகாலமாக காணாமல் போனதாகக் கூறப்பட்ட ஜாதிக ஹெலஉறுமயவின் இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் நேற்று பாராளுமன்றத்திற்கு வந்திருந்தோடு அரசாங்கத் தரப்பு ஆசனங்களிலும் அமர முற்பட்டனர்.

காணமல் போனஅத்துல ரத்தினசில தேரர் மற்றும் கப்பரா புண்ணியானந்த தேரர் ஆகியோர் நேற்று சபைக்கு வந்ததும் முதலில் அரச தரப்பு ஆசனங்களில் அமர முயற்சித்தனர். பின்னர் எதிர்க்கட்சி ஆசனங்களில்போய் அமர்ந்தனர்.

## ஹெல உறுமயவின் வாக்கு சீட்டு காணாமற்போனது!

(கொழும்பு)

ஜாதிக ஹெலஉறுமய பாராளுமன்ற உறுப்பினர்களின் சபாநாயகர் தெரிவிற்கான வாக்குச் சீட்டுகள் காணாமற் போனதைத் தொடர்ந்து புதிய வாக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டு வாக்களிப்பு இடம் பெற்றது. முதலாவது முறை வாக்குப் பதிவு நடந்தபோதே இத் தகைய சம்பவம் இடம்பெற்றது இவ் முத

(IVஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பிரதிநிதிகள்–தமிழ்ச்செல்வன் நேற்று கிளிநொச்சியில் சந்தித்துப்பேச்சு

தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து ஆராய்வு

(அலுவலகச்செய்தியாளர்)

தமிழீழ அரசியல்த் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை ஐ.நா. பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சியில் சந்தித்து பேச்சுநடத்தியுள்ளனர்.

நேற்று முற்பகல் 11.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச் சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், அரசசார்பற்ற நிறுவன இணைப்பாளர் திரு.மு.பாவரசன்(தியாகராஜா) தமிழீழ விடுத

(IVஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

### ஆரம்பமாகிறது

கேம்பிறிச் கல்லூரி, பேருந்து நிலைய வீதி, கிளிநொச்சியில் 2004.04.21 புதன் மாலை 4.00 மணிக்கு ஆரம்பம் நிர்வாகி S. தவரூபன். (4451)

### A\L கணித விஞ்ஞான செயலமர்வு

2004 மேயில் கணித, விஞ்ஞான இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிற்கான செயலமர்வு (24,25) சனி,ஞாயிறு கிழமைகளில் கொழும்பிலிருந்து வரும் விசேட ஆசிரியர் குழுவினரால் பு.ம.வி. பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பு.ம.வி..தில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து முல்லைத் தீவு மாவட்ட மாணவர் களையும் பயன்பெறுமாறு வேண்டுகின்றோம். (சி-7189)

### விற்பனைக்குண்டு

கச்சாய்வீதி, கொடிகாமத்தில் 8பரப்பு தென்னங்காணியுடன் கூடிய ஐந்து அறை, குசினி,ஹோல் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:-செ.ஆனந்தநடராசா,49, உதயநகர்மேற்கு கிளிநொச்சி(4457)

### தவறிவிட்டது

சிவகுமார் ஜெகதீஸ்வரி ஆகிய எனது தாலிக்கொடி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழா நடந்த அன்றைய தினம்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனைகளில்அல்லது சி.சூரசங்காரம், அரசடி பிள்ளையார் கோவில் வீதி, 4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4077)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பிதழ்



கடந்த 25.03.2004 வியாழக் கிழமை இறைபத மடைந்த எமது குடும்பத் தலைவி.

**அமரர் பிலோமினா யோகராணி நவரட்ணம்**

அவர்க ரின் மறைவு குறித்த நினைவஞ்சலி வழிபாடு எதிர்வரும் 24.04.2004 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:-சில நண்பர்கள், உறவினர்களுக்கு நேரில் வந்து அறிவிக்க முடியாததையிட்டு மன்னித்து இதனை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நவரட்ணம்,
குடும்பத்தினர்.
(கிராம அலுவலர்) 469, திருநகர் ,மல்லாவி.

(4460)

# என்னநோக்கத்திற்காக மக்கள் வாக்களித்தனரோ அதற்கு செயல்வடிவம் கொடுப்போம்

## -வன்னி மாவட்ட பா.உறுப்பினர் கனகரத்தினம்

(புதுக்குடியிருப்பு)

மக்கள் என்ன நோக்கத்திற்காக எமக்கு வாக்களித்தார்களோ அதற்கு நாம் செயல்வடிவம் கொடுப்போம் என வன்னி மாவட்ட தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பேரினவாத அரசின் திட்டமிட்ட அடக்குமுறையும், சனநாயகத்துக்கு விரோதமான செயலும் காரணமாகவே எமது மக்கள் பெரும் துன்பங்களின் மத்தியில் நீண்ட தூரம் நடந்து வாக்களிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 21.04.2004 அன்று புதுக்குடியிருப்பில் முல்லை• மாவட்ட அரசியல்துறைச் செயலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்து உரை யாற்றியபோதே வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்; இந்தத் தேர்தல் மூலம் விடுதலைப் புலிகளின் பலத்தை மக்கள் மீண்டும் உலகுக்கு பறைசாற்றியுள்ளனர். மக்களின் விடுதலை உணர்வை நீண்டதூரம் நடந்து வாக்களிக்கச் சென்றதன் மூலம் நாம் அவதானிக்க முடிந்தது.

கைக் குழந்தையை தோழினில் சுமந்தும், தள்ளாடும் வயதில் பொல்லுப்பிடித்தும், அந்த கொளுத்தும் வெயிலில் தள்ளாடி நடந்து வாக்களித்துள்ளனர் எமது மக்களின் உணர்வு இதன் மூலம் வெளிப்பட்டுள்ளது. மக்கள் உணர்வுபூர்வமாக சென்று வாக்களித்துள்ளனர். இவர்களுக்கு எமது இதயபூர்வமான நன்றிகள் எனவும் அவர் குறிப்பிட்டார். (08)



**ஆதவன் கல்வி நிலையம்**
கிளிநொச்சி
A/L 2006
கலை,வர்த்தகம்
புதிய பிரிவுகள்
ஆரம்பம் 24.04.2004
சனி காலை 8.00 மணி
நிர்வாகி.
(4453)

**மின்னிலா மின்னியல்**
யாழ். சாலை, கிளிநொச்சி.
(திரேசம்மா கோவில் முன்பாக)
எம்மிடம்:–வண்ண வண்ண மின்குமிழ்கள், மின் விசிறிகள்,அனைத்து மின்இணைப்புப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பு:– எம்மிடம் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கட்கு மாதமுடிவில் குலுக்கல் முறையில் பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கக் காத்திருக்கின்றோம்.
(4456)

வேளாண் மக்களுக்கு நிழல் தரும் பெருவிருட்சம்
**வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்**
முல்லை வேளாண் மக்களின் வளர்ச்சிக்காக
இன்று குமுளமுனை கொட்டுக்கிணற்றுப்பிள்ளையார் கோவில்
பிரதான சாலையில் அமைந்த கட்டிடத்தொகுதியில் உதயமாகின்றது.
வேளாண் மக்களின்
மகிழ்ச்சியே எமது இலக்கு
தலைமைப்பணிமனை:
வன்னிவேளாண்தொழில்நுட்பநிறுவனம்
இல:41 கண்டிச்சாலை, கிளிநொச்சி.
தொ.பே: 021-2285745
தொ.நகல்: 021-2285746






(சி-9381)

# யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள்

## பயிற்சி நிலையங்களைப் பார்வையிட்டனர்



(அலுவலக செய்தியாளர்)

"பாஜ் மற்றும் நிடோ" நிறுவனங்கள் இணைந்து நடாத்தும் தொழில்நுட்ப நிறுவனத்தின் செயற்பாடுகளை யு,என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் நேற்று பார்வையிட்டுள்ளனர்.

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் அமைந்திருக்கும் மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வரும் தொழில் பயிற்சி நெறிகளையும், அதில் மாணவர்கள் காட்டி வருகின்ற ஆர்வம் என்பவற்றையும் கிளி. முல்லை. மாவட்ட "பாஜ்"நிறுவன முதன்மை பிரதிநிதியிடம் கேட்டறிந்த மேற்படி குழுவினர் போரினால் பாதிக்கப்பட்ட பகுதியில் வசிக்கும் மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கான தொழில் பயிற்சிகளை வழங்குவது தமக்கு மகிழ்ச்சி தருவதாகவும்,மாணவர்கள் இதில் காட்டி வருகின்ற ஆர்வம் மிகவும் வரவேற்புக்குரியது எனவும் தெரிவித்தனர்.

நேற்று நண்பகல் 1.30 மணிக்கு155ஆம் கட்டையில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையத்துக்கு வருகை தந்த மேற்படி குழுவினரை பயிற்சி நிலைய மாணவர்கள் மலர் மாலை அணிவித்து வரவேற்றனர். இங்கு தையல் பயிற்சி நெறியில் 21 பெண்களும்,தளபாட உற்பத்திப் பயிற்சியில் 21 பெண்களும் உழுவு இயந்திரம் திருத்தும் பயிற்சியில் 21 ஆண்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். இதே வேளை இங்கு பயிற்சி பெற்று முதலாவது தொகுதி மாணவர்கள் வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (லோ, தீ)

# கிளி. நகர்ப் பகுதியில் சுழல்காற்று


## சில வீட்டுக் கூரைகள் காற்றில் பறந்தன

(அலுவலக செய்தியாளர்)

கிளி, நகரப்பகுதியில் நேற்று மாலை ஏற்பட்ட சுழல்காற்று காரணமாக வீடுகள் , பயன் தருமரங்கள் என்பன முறிந்து சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று மாலை 3.00 மணியளவில் திடீர் என ஏற்பட்ட இச் சுழல்காற்றால் குடிமனைகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. பயன்தரு மரங்கள் முறிந்தும், வேருடன் சாய்ந்தும் வீழ்ந்தன.

இந்த நிலையில் கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் அமைந்துள் வீடு ஒன்றின் கூரை 30 மீற்றருக்கு அப்பால் உள்ள வீதியில் தூக்கி வீசப்பட்டது. இவ்வேளை வீட்டில் எவரும் இல்லாத காரணத்தால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. அதேவேளை இதன் அருகில் உள்ள வீதி பொறியியலாளர் அலுவலகத்தில் இருந்த சிறிய வீட்டின் கூரைத் தகடுகள் அருகில் உள்ள வேப்பமரத்தின் மீது தூக்கி வீசப்பட்டிருந்தது.



இவ்வாறு வீசிய சுழல்காற்றின் தாக்கத்தால் கரடிப்போக்கு, உருத்திரபுரம் வீதியில் அமைந்துள்ள 6ஆம் வாய்க்கால் பகுதியிலுள்ள வீடு ஒன்றின் கூரைத் தகடுகள் அருகில் உள்ள வீட்டையும் தாண்டி மாமரம் ஒன்றின் மேல் தூக்கி வீசப்பட்டு இருந்தது. மாமரங்கள் வேருடன் சாய்ந்தும் கொப்புகள் முறிந்தும் காணப்பட்டன. வீட்டில் இருந்தவர்கள் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. இதே போல கிளி.நகரின் பல்வேறுபட்ட பகுதிகளிலும் திடீரென வீசிய இக் காற்றினால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு வீசிய சுழல் காற்று இரண்டு நிமிடங்கள் மாத்திரம் வீசியமை குறிப்பிடத்தக்கது. (லோ,தீ)

# டிரோன் பெர்னாண்டோவிற்கெதிராக ஐ.தே.கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை

### –கட்சி செயலாளர் செனரத் கப்புக்கொட்டுவ தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.தே.கட்சித் தலைமையை விமர்சித்தமைக்காக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஐ.தே.க. செயலாளர் கூறியுள்ளார்.

தேசியப்பட்டியலில் நியமனம் வழங்குவதாகத் தெரிவித்து தம்மை போட்டியிட அனுமதிக்கவில்லை என்று டிரோன் பெர்னாண்டோ கூறியிருந்தார். அதுமட்டுமன்றி ஐ.தே.க. தலைவர் ரணில்விக்கிரமசிங்கவைக் காரசாரமாக விமர்சித்துமிருந்தார். இதனையடுத்தே ஐதேக செயலாளா செனரத் கப்புகொட்டுவ இவ்வாறு கூறியுள்ளார்.

# ஜே.வி.பி.வேண்டுகோள்

(கொழும்பு)

சட்ட விரோதமாக இத்தாலி நாட்டுக்கு செல்ல முயன்று இம் மாதம் 8ஆம் திகதி கொழும்பு நீதி மன்றத்தால் 'இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனை பெற்றுள்ள 264 கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு காலி மாவட்ட ஜே.வி.பி. உறுப்பினர் சந்திரசேன விஜேசிங்க சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# குருநாகல் மாவட்ட தமிழருக்கு ஐ.ம.சு.மு.யினர் அச்சுறுத்தல்

கடந்த பொதுத்தேர்தலுக்கு பின்னர் குருநாகல் மாவட்ட தோட்டப் பகுதிகளில் தமிழ் மக்களுக்கு பல்வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கியதேசிய முன்னணிக்கு ஆதரவளித்தமை தொடர்பிலேயே அவ்வாறான அச்சுறுத்தல்கள் ஐ.ம.சு. முன்னணியினரால் விடுக்கப்பட்டு வருகின்றன. மாத்தறை விட்டகந்த முவனகந்த, நொட்டிங்கில் மற்றும் தொடங்கஸ்லந்த தொகுதியின் கெப்பிட்டிகல,றேந்த கொடபோன்ற பகுதிகளிலேயே தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக முன்னாள் ஐக்கிய தேசிய கட்சியின் தமிழ் அமைச்சர்களிடம் முறையிட்டபோதும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். இந்த அச்சுறுத்தல்கள் காரணமாக தமிழ் இளைஞர்கள் பலர் வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர். பெண்பிள்ளைகளும் பெற்றோரால்வேறு இடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். இதேவேளை தமது நிலை குறித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களோ அல்லது ஐக்கிய தேசிய கட்சியோ உரிய நடவடிக்கை எடுக்காமையால் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் முறையிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(32)

# இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் சிறிலங்கா அணி வெற்றி

(ஹராரே)

சிம்பாப்வேயில் இடம்பெற்றுவரும் சிறிலங்கா அணிக்கும் - சிம்பாப்வேக்கும் இடையிலான ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் இரண்டாவது போட்டியில் சிறிலங்கா அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிலங்கா அணி சிம்பாப்வே அணியை துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தது. இதை அடுத்து துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. சமிந்தவாஸ், முரளிதரன் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி 20.5 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 139 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை எட்டியது. சமன் ஜெயந்த ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களைப் பெற்றார்.

இதேவேளை, சிறிலங்கா துடுப்பாட்ட வீரர் ஜெயசூரிய இப் போட்டியில் 28 ஓட்டங்களைப் பெற்றவேளையில் சிறிலங்கா துடுப்பாட்ட வீரர்களில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டுள்ளார். ஏற்கனவே, அதி கூடிய ஓட்டங்களைப் பெற்றவராக இருந்த அரவிந்த டி சில்வா 308 போட்டிகளில் 9284 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இவ்விலக்கை ஜெயசூரிய 315 போட்டிகளில் கடந்து சென்றுள்ளார்.

# இந்.விமானப்படை உலங்குவனூர்தி வீழ்ந்து நொருங்கியது

### விமானி பலி; துணை விமானிக்குக் காயம்

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டு பகுதியில் இந்திய விமானப் படையினரின் உலங்குவானூர்தி விழுந்து நொருங்கியது. அதை ஓட்டிச் சென்ற விமானி கொல்லப்பட்டார். துணை விமானி காயமடைந்தார். இந்த சம்பவம் குறித்து இராணுவ விசாரணை நடத்த உத் தரவிடப்பட்டிருப்பதாக அதிகாரி தெரிவித்தார். விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய நிபுணர்கள் குழு அந்த இடத்திற்குச் செல்ல உள்ளது. ஒரு மாதத்திற்குள் இரண்டாவது தடவையாக விமானப் படை விமானம் விபத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. முன்னர் மோசமான வானிலை காரணமாக இரண்டு யாகுவர் போர் விமானங்கள் சோனா மார்க் அருகே விழுந்து நொருங்கின. இதில் இரண்டு விமானிகள் உயிர் இழந்தது தெரிந்ததே.

# அமெ. பயிற்றுவித்த ஈராக்கிய பொலிசிற்குள் கிளர்ச்சியாளர்கள் ஊடுருவிவிட்டனராம்!

### அமெரிக்க இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(பாக்தாத்)

அமெரிக்காவின் கூட்டுப் படையினரால் பயிற்றுவிக்கப்பட்ட ஈராக்கிய பொலிசில் ஈராக்கிய கிளர்ச்சியாளர்களும் ஊடுருவி உள்ளதாக அமெரிக்க இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஈராக்கைக் கைப்பற்றிய அமெரிக்கா ஈராக்கில் இடைக்கால ஆட்சி ஒன்றை ஏற்படுத்திய பின்னர் அமெரிக்கக் கூட்டுப் படைகள் அங்கிருந்து வெளியேறும் என அமெரிக்கா கூறியிருந்தது. இதற்கமைவாக ஈராக்கில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்துவதற்காக அமெரிக்கக் கூட்டுப் படையினரால் ஈராக்கியர்கள் பயிற்று விக்கப்பட்டனர். இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்டவர்களில் பத்து வீதமான தீவிரவாதிகளும் உள்ளடங்கியிருப்பதாகவும், ஏனையவர்களில் நாற்பது வீதமானோர் தமது தொழில்களை விட்டுவிட்டதாகவும் அமெரிக்க இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

தென் ஈராக்கில் உள்ள பொலிஸ் நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மூன்று கார்க் குண்டுத் தாக்குதல்களினால் அறுபத்தெட்டு பேர் கொல்லப்பட்ட சில மணி நேரத்தின் பின்னர் அமெரிக்கா அதிகாரியின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை, தம்மால் ஈராக்கில் பயிற்று விக்கப்பட்டவர்களில் பத்துப் பேரில் ஒருவர் தமக்கு எதிராகச் செயற்படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# தீவிரவாதிகளின் தாக்குதலில் இந்.வருவாய்த்துறை அமைச்சர் காயம்

(புதுடில்லி)

இந்தியாவின் யார்க்கன் மாநிலத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் நில வருவாய்த்துறை அமைச்சர் திரு.மத்யூசிங் காயமுற்றார்.

தலொழு மாவட்டத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்தது. இதில் அவருடைய உறவினர் ஒருவரும் காயமடைந்தார். பின்னர் அமைச்சரின் மெய்ப் பாதுகாவலர்கள் தீவிரவாதிகளை நோக்கிச் சுட்டதில் இரண்டு பேர் காயமடைந்தனர். திரு. மத்யூசிங்கும் அவருடைய உறவினரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

# ரஷ்யாவின் வீற்றோ பிரயோகத்தால் சைப்பிரஸ் இணைப்பு முறியடிப்பு

(கிறீஸ்)

பிரிந்துள்ள சைப்பிரசை இணைப்பதற்காக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு எதிராக ரஷ்யா தனது வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளது.

சைப்பிரஸ் பிரிந்து துருக்கிய சைப்பிரஸ், கிரேக்க சைபிரஸ் என ஒன்று துருக்கியுடனும் மற்றையது கிரேக்கத்துடனும் இணைந்துள்ளமை தெரிந்ததே. இந்நிலையில் துருக்கி, கிரேக்க தலைவர்களுக கிடையே கடந்தசில மாதங்களாகப் பிரிந்துள்ள சைப்பிரசை ஒன்றினைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஆனால் இந்தப்பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன.

இதனை அடுத்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபிஅனான் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்காகத் தனது சமாதானத் திட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

சைப்பிரசை மீண்டும் ஒன்றினைப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பிரேரணைமீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் பாதுகாப்புச்சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் ரஷ்யா தவிர ஏனைய பதின்நான்கு நாடுகளும் ஆதரவளித்துள்ளன.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளுக்கான ரஷ்யத்தூதுவர் சைப்பிரஸ் சர்வசன வாக்கெடுப்பில் செல்வாக்குச் செலுத்துவதற்காகவே இந்தப்பிரேரணை கொண்டுவரப்பட்தாகக் கூறினார்.

அதேவேளை வாக்கெடுப்பு எவ்வித அழுத்தமுமின்றி சுதந்திரமான முறையில் நடைபெற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.எனினும் இது தொடர்பாகப் பாதுகாப்புப் பேரவை விரைந்து செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்த வாக்கெடுப்பு வெற்றியளித்து இணைந்த சைப்பிரஸ் உருவாகினால் எதிர்வரும் "மே" முதலாந்தேதி ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து கொள்ள முடியும் அவ்வாறின்றி வாக்கெடுப்பு தோல்வியடையும் பட்சத்தில் கிரேக்க சைப்பிரஸ் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைய முடியும் என ஏற்கனவே செய்தி கள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

# வீடுபார்க்கச் சென்ற வயோதிபர் மீது கடற்படையினர் தாக்குதல்

### பாதிக்கப்பட்ட வயோதிபர் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கடற்படையினர் தன்னைக் கடுமையர்க தாக்கியதாகக் கூறி வயோதிபர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். நேற்று மண்டைதீவைச் சேர்ந்த என். தம்பிராஜா என்பவரால் செய்யப்பட்ட இம்முறைப்பாடு பற்றி மேலும் தெரியவருவதாவது.

வழமைபோல நேற்றுமுன்தினம் மண்டைதீவில் உள்ள தனது சொந்த வீட்டினை பார்வையிடுவதற்காக துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த பிரஸ்தாப வயோதிபர் அவரது வீட்டிற்கு அண்மையிலிருந்த கடற்படைமுகாம் ஒன்றின் வாயிற்கதவு வரை சென்றுவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த கடற்படையினர்அவரைக் கடுமையாக தாக்கித்துன்புறுத்திப் பின் விடுவித்துள்ளதாக சுட்டிக்காட்டியே இம்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (33)

# பரு. நீதிமன்றில் கொள்ளை இருவர் பொலிசாரால் கைது

(வடமராட்சி)

பருத்தித்துறை நீதி மன்றில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்ற பல்வேறு கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டவர்களெனத் தெரியவருகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், பருத்தித்துறை நீதிமன்றக் கட்டடத்தை உடைத்துக் கொண்டு இரவு வேளையில் உட்புகுந்ததாகத் தெரிவிக்கப்படும் இவர்கள், தம்முடன் தொடர்புடைய வழக்குக் கோவைகளைக் கொள்ளையிட்டுச் சென்றிருந்ததாக கூறப்படுகின்றது.

எனினும் நீதிமன்ற வளவினுள் இவர்களதுகைவிரல் அடையாளங்களும், ஏற்கனவே பொலிசார் வசமிருந்த இவர்களது கைவிரல் அடையாளங்களும்,பொருந்தியதையடுத்து நெல்லியடிப் பொலிசாரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் இருவரையும் மீண்டும் யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்க நீதவான் க.அரியநாயகம் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# மகாவலி அமைச்சின் செயலர், உயர் பதவிகள் ஜே.வி.பி.இன் அனுமதியுடனேயே இயங்கவேண்டும்

### ஜே.வி.பி. நிபந்தனை

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தி அதிகார சபை அமைச்சு சனாதிபதியின் கீழ் இயங்குவதற்கும் அதன் பிரதி அமைச்சர் பதவி ஜே.வி.பி.யினருக்கும், அமைச்சின் செயலாளர் பதவி மற்றும் உயர் பதவிகள் ஜே.வி.பி. அனுமதியுடன் இயங்குவதைத் தவிர்த்து ஏனைய முடிவுகளுக்கு நாங்கள் உடன்பாட மாட்டோம் என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் இம்மாதம் 20ஆம் திகதி ஜே.வி.பி. இத்தீர்மானத்திற்கு உடன்பட்டுள்ளது. ஜே.வி.பி.யின் நான்கு அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்கும் எனவும் மேலும் இவைகளுக்கு அரசாங்கம் முறையான பதிலைக் கொடுக்காவிட்டால் நாட்டு மக்களுக்க விளக்கமளிக்கப்போவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

# சனாதிபதி உரை தமிழில் வாசிக்கப்பட வேண்டும்!

### தமிழரசுக் கட்சி பா.உ.கள் கோரிக்கை

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகாவின் உரையைத் தமிழில் வாசிக்க வேண்டும் எனத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். நேற்று 13ஆவது பாராளுமன்ற அமர்வு ஆரம்பமான போது அதில் இடம்பெற்ற சனாதிபதியின் உரையை தமிழில் வாசிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால், இதற்குப் பதிலளித்த பாராளுமன்றச் செயலாளர் பிரியாணி விஜியசேகர சனாதிபதியின் செய்தி ஏக காலத்தில் மொழிமாற்றம் செய்யப்படுவதால் அது அவசியமில்லை எனக் கூறி நிராகரித்தார்.

# நேற்றைய அமர்வில் 21 பேரே பங்கேற்பு

(கொழும்பு)

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 21 பாராளுமன்ற உறுப்பினர்களே நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பின ரான கிங்சிலி இராசநாயகம் இராஜிநாமாச் செய்ததையடுத்தே மிகுதி 21 பேரும் கலந்து கொண்டனர்.

# ஜாதிக ஹெல உறுமய இரு குழுவாக வாக்களிப்பு

### ஐ.தே.க.வில் ஒருவர் எதிர்த்தரப்பை ஆதரித்தார்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் தெரிவின்போது பிரிந்து வாக்களித்துள்ளனர். காணாமற்போனதாகக் கூறப்பட்ட இரு பாராளுமன்ற உறுப்பினர்களும், ஐ.ம.சு. முன்னணிக்கும் ஆரம்பத்திலேயே வாக்களித்திருந்தனர்.

இதேவேளை, மூன்றாவது தடவை நடந்தவாக்கெடுப்பில் இரு ஜாதிக ஹெலஉறுமய உறுப்பினர்கள் ஐ.தே.முன்னணிக்கு வாக்களித்துள்ளனர். அத்துரலியே ரத்தினதேரர் ஓவல் பித சோபித ஆகிய இரு தேரர்களுமே ஐ.தே.முன்னனிக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் ஆகும்.

இதேவேளை ஐ.தே.கட்சியைச் சேர்ந்த அடையாளம் காணப்படாத ஒருவர் ஐ.ம.சு.முன்னணிக்கு வாக்களித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி விளையாட்டரங்கைக் கையளிக்க சிறிலங்கா படைத்தரப்பு மீண்டும் பின்னடிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி பொது விளையாட்டு அரங்கை பொதுமக்களது பாவனைக்கு விடுவிக்கும் நடவடிக்கையை படைத்தரப்பு மீண்டும் பிற்போட்டுள்ளது. படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் அமைந்துள்ள சாவகச்சேரி பொதுவிளையாட்டரங்கை கடந்த 19ஆம் திகதி, சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்திடம் கையளிக்கப் போவதாக படைத்தரப்பு முன்னர் அறிவித் திருந்தது.

இதையடுத்து நகரசபைப் பணியாளர்கள் மூலம் உயர்பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்திருக்கும் இவ்விளையாட்டரங்கு துப்புரவு செய்யப்பட்டிருந்தது.

உயர்பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்திருக்கும் இவ்விளையாட்டு அரங்கை பொதுமக்கள் பிற்பகல் வேளைகளில் 3.30 மணி தொடக்கம்6.30 மணிவரை பயன்படுத்தலாம் எனவும் முன்னர் படைத்தரப்பு அறிவித்திருந்தது.

### எதிர்க்க..

வழிமொழிந்தார். ஐ.ம.சு. முன்னணியின் சார்பில் டி.யூ.குணசேகரவின் பெயரைப் பிரதமமந்திரி மகிந்த ராஜபக்ஷ முன்மொழிய இதனை ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலர் விமல்வீரவன்ச வழிமொழிந்தார்.

இருவர் சபாநாயகர் பதவிக்குப் போட்டியிட்டதினால் இரகசிய வாக்கெடுப்பிற்கு பாராளுமன்றச் செயலாளரினால் அழைப்பு விடுக்கப்பட்டது. இத்தகையதொரு நிலையில் வாக்களிப்பின் போது வாக்குச்சீட்டுக்களில் வாக்காளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட வேண்டும் என ஐ.தே.கட்சி கோருகிறது. எனினும் பின்னர் ஒவ்வொருவரின் பெயரும் அழைக்கப்பட்டு வாக்குச்செலுத்தும் முறை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தநிலையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஜாதிக ஹெல உறுமயவின் குழுத்தலைவர் பெயர் வாசிக்கப்பட்ட போது அவர் தமது கட்சிவாக்களிப்பில் கலந்துகொள்ளப் போவதில்லை எனக் குறிப்பிட்டார். எனினும் காணாமல் போய் இன்று சபைக்கு திரும்பிய இரண்டு பிக்குமாரின் பெயர்கள் வாசிக்கப்பட்டபோது அவர்கள் இருவரும் வாக்களித்தனர்.

இறுதியில் இரண்டு தரப்புக்கும் 108,108 என்ற சமநிலையில் வாக்குகள் கிடைத்ததையடுத்து நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின்படி மீண்டும் மறு வாக்குப்பதிவு இடம்பெற்றது. இதன்போது அனுராதபுரத்தில் இருந்து வந்த இரண்டு ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரணில்விக்கிரமசிங்கவிடமும், லொக்குபண்டாரவிடமும் காட்டிவிட்டு தமது வாக்கைச் செலுத்தியமையால், அதனை ஆட்சேபித்து ஆளும் கட்சியினர் ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட னர். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வாக்குப்பெட்டியின் மீது அமர்ந்தும் தமது ஆட்சேபத்தை வெளியிட்டார். இதன்காரணமாக இரண்டாம் கட்ட மீள் வாக்குப்பதிவு ரத்துச்செய்யப்பட்டு மூன்றாவது முறையாக வாக்குப்பதிவு இடம்பெற்றது. இந்த வாக்கெடுப்பில் இருந்து விலகிச் சென்ற ஏழு ஜாதிக ஹெல உறுமய பௌத்த பிக்குகளில் இருவர் ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களித்தனர். எனினும் அடையாளம் காணப்படாத ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவர் அரசாங்கத்திற்கு வாக்களித்தார்.

இதனடிப்படையில், லொக்கு பண்டாரவுக்கு 110வாக்குகளும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 109வாக்குகளும் கிடைத்தன. இதனடிப்படையில் 16வது சபாநாயகராக டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார தெரிவு செய்யப்பட்டார். ஏற்கனவே தமிழரசுக்கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களிக்க முடிவெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

### ஐ.நா..

லைப்புலிகளின் திட்டமிடல் செயலகப்பணிப்பாளர் திரு.கு.தூய வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் சார்பாக ஜெனீவாவிற்கான யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி திரு. டெனிஸ்மைக்நமாரா, வனேசா மார்ட்டர், மார்ட்டின் லெ..ட்டஸ், பீற்றர் ஜான்சன், நீல்றைற், ஆர்வ ஷிபட்டேல் மேவிமேர் .பிஆகியோர் உட்பட முக்கிய உறுப்பினர்கள் பலர்கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலை மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கை, இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், பாதுகாப்பு வலயம், மீள் குடியேற்றத் திட்டங்கள், வெளி இடங்களில் வாழும் அகதிகளின் நிலை போன்ற பல் வேறுவிடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

இன்றைய சந்திப்பில் யூ.என். எச்.சி.ஆர்.ஜெனீவாவுக்கான பிரதான வதிவிடப் பிரதிநிதி வறுமையிலும் வறுமையின் அடிமட்டத்திலும் வாழும் ஏழைத் தமிழ் மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே தொடர்ந்தும் வாழ்ந்து வருவதை நான் அவதானித்ததாகத் தெரிவித்துள்ளதாகவும் இதற்கான அவசிய நடவடிக்கைகளை அவசரமாகக் கவனிக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் தெரிவித்தார். (ஜோதி)

### ஐ.தே...

பினர் லொக்கு பண்டாரவுக்கு சாதகமாக வாக்களித்தோம் இந்த வாக்களிப்பு மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவானது என்றோ அதற்கு ஆதரவாக செயற்படும் என்றோ மக்கள் கருதக்கூடாது என்றும் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்துள்ளார்.

### 1960

நேர்ந்துள்ளது இதில் குறிப்பிடத்தக்கவிடயம் என்னவெனில் இரண்டு தடவையும் தமிழரசுக்கட்சி அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிந்துள்ளமையே ஆகும்.

### ஹெல...

லாவது வாக்களிப்பின் போது ஜாதிக ஹெல உறுமய வாக்களிப்பில் கலந்து கொள்வதில்லை எனச் சபையில் அறிவிக்கப்பட்ட போதும் ஒரு வாரத்தின்முன் காணாமற் போனதாகக் கூறப்பட்ட இரண்டு பௌத்த பிக்குகளும் ஐ.ம.சு. முன்னணிக்கு வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

### ஐ.ம.சு...

இன்றைய சபாநாயக்கர் தேர்வில் வெற்றிபெற்றுள்ளோம். எனவே நாம் அனைவரும் இணைந்து மிக விரைவில் இந்தச் சிறுபான்மை ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி அரசைபதவி விலக்குவதற்கான முயற்சிகளை அடுத்துவரும் சில நாட்களில் மேற்கொள்ளவுள்ளோம் எனவும் மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆண்டு ஏப்பிரல் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.